Registered as a Newspaper

PAPER CLASS
சனி, ஞாயிறு
காலை 8.30—12.30
Physics - திரு வர்ணம்
Chemistry - திரு. தில்லை நாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure / Applied ]-Maths
-திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.

# உதயன்

உண்மை — அஞ்சாமை — நடு நிலைமை

விலை ரூ-1/=

PAPER CLASS
PHYSICS:
திரு. சத்தியசிலன்
CHEMISTRY:
திரு. மக்லி
செவ்வாய் வியாழன்
2.30 — 4.30
விபரங்களுக்கு;-
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 7 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 9 (20-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-54

★ 12 மணி நேரத் தேடுதல் வேட்டை ★ போராளிகள் -- படையினர் மோதல்

# மட்டக்களப்பில் நேற்று 15 பேர் சுட்டுக் கொலை

## சடலங்கள் வீடுகளில் எரிந்த நிலையில் கிடந்தன

— மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளர்: உதயசாரதி —

மட்டக்களப்பு,ஜன.20

மட்டக்களப்பு நகரத்தில் உள்ள இருதயபுரம் பகுதியில் ஆயுதப்படையினர் நேற்று 12 மணி நேரத் தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது அவர்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் நேரடி மோதல் இடம் பெற்றது.

மோதலின் விளைவாக 15 பொதுமக்களும், 2 படை வீரர்களும் மரணமானார்கள்.

சில பொதுமக்களின் சடலங்கள் அவர்களின் வீடுகளில் கருகிய நிலையில் காணப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மோதலின் முடிவில் 14வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 500 பேர் வரையில் ஆயுதப்படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று அதிகாலை 4மணியளவில் ஆயுதப்படையினர் கவசவாகனம், இ.போ.ச. பஸ் உட்பட 11 வாகனங்களில் இருதயபுரம்பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதலை ஆரம்பித்தனர்

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் கிரனைட்டுக்கள் வீசப்பட்டன. குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

பின்னர் போராளிகளும் ஆயுதப்படையினரும நேருக்குநேர் மோதிக் கொண்டனர்.

ஹெலிக்கொப்டர் ஒன்று வானத்தில் இருந்து சுட்டு ஆயுதப்படையினருக்கு பாதுபாப்பு வழங்கியது.

சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் காலை 7.30 மணிவரை கேட்டுக் கொண்டே இருந்தன.

### இரு கொமாடோக்கள் மரணம்

இந்த மோதலில் கொமாண்டோ படையைச் சேர்ந்த ஒரு சப் இன்ஸ்பெக்டரும், ஒரு கான்ஸ்டபிளும் மரணமானார்கள்.

கான்ஸ்டபிளான சமரவிக்ரம கருணாநந்த (வயது 20)அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

49 வயதான சப் இன்ஸ்பெக்டர் முதியான்ஸலாகே தர்மசிறி, மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சையின் பின்னர் இறந்தார்.

மோதல்களின் விளைவாக பொதுமக்கள் 15 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள், இவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படவில்லை.

இதனிடையில், இருதயபுரம் வீடுகள் சிலவற்றில் சிலரின் சடலங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

### இப்படி சொல்கிறது அரச அறிக்கை

மட்டக்களப்பு, ஜன. 20

நேற்று அதிகாலை மட்டக்களப்பு, இருதயபுரம் பகுதியில் போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையே நடந்த மோதல் பற்றி பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

மோதலில் 21 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதைவிட 7 தீவிரவாதிகள் சைனட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்.

இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர் – இப்படிக் கூறியது அந்த அறிக்கை!

## கடற்படையினர் 'கோட்டை' விட்டனர் தமது டிங்கியை!

கொழும்பு, ஜன 20

ஆயுதந் தாங்கிய 10 போராளிகள் மன்னார் கடற்கரையில் விடப்பட்டிருந்த கடற்படை 'டிங்கி'யைக் கடத்திச் சென்று விட்டார்கள்.

சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

10 போராளிகள் ஆயுதங்களுடனும் மீன்பிடி இயந்திரம் ஒன்றுடனும் மன்னார் கடற்கரைக்கு வந்தனர்.

அங்கு கரையில் பல லட்சம் ரூபா பெறுமதியான இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான 'டிங்கி' விடப்பட்டிருந்தது.

அந்த இயந்திரத்தை டிங்கியில் பொருத்தினார்கள்.

'டிங்கி' புறப்பட்டது போராளிகள் பத்துப் பேரும் டிங்கியில் பயணமானார்கள்.

## மோட்டோ பாவிப்பதற்கு புதுக்கட்டுப்பாடு

கொழும்பு. ஜன.20

தீவிரவாதிகள் மோட்டோ பாவித்து முகாம்கள் மீது தாக்குதல் நடத்தாவிட்டால், ஆயுதப்படையினரும் மோட்டோ மூலம் தாக்கமாட்டார்கள். இப்படி அரசாங்கம் அறிவித்துள்ளது.

முகாம்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது யாழ் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

தீவிரவாதிகள் மோட்டோ பாவித்து முகாம்களைத் தாக்காதவரை, ஆயுதப்படையினரும் மோட்டோ தாக்குதலில் ஈடுபடமாட்டார்கள்.

ஆனால் முகாம்களைச் சுற்றிலும் மோட்டோ தாக்குதலை நடத்துவதற்காக தீவிரவாதிகள் ஏவுதளங்களை அமைத்துள்ளனர் என்பது தெரிகிறது.

இப்படி அரசாங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

## கிளிநொச்சியில் தொடர்ந்து பதற்றம்

கிளிநொச்சி, ஜன 20

கிளிநொச்சியில் ஆயுதப் படை வீரர்கள் ரோந்து தேடுதலில் ஈடுபட்டு வருவதில் அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் நான்காம் வாய்க்கால் ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்திய படையினர், துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் பலியானார்.

பலியானவர் பெயர் காந்தன் ஜெயா.

இவருடன் வந்த மற்றொரு இளைஞர் தப்பிவிட்டார்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை உருத்திரபுரம் 8-ஆம் வாய்க்கால் பகுதியில் வயல் ஒன்றில் பசளை விதைத்துக் கொண்டிருந்த த. சிவரத்தினம் என்பவர் விதிப் பக்கம் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டுக்கு இலக்கானார்.

இவரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்காகவந்த மற்றொருவர் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் பின்னர் வயல் வெளியில் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

## ★ பதவி கவிழ்ப்பு

ஏடன், ஜன.19

தெற்கு யேமன் ஜனாதிபதி அலி நஸார் முகம்மது பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார்.

அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே அவரைப் பதவியிலிருந்து தூக்கி எறிந்ததாக ஏடன் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏடனில் தொடர்ந்து கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. (முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

# இனப் பிரச்சினையைத் தீர்க்க விரைவில் திடீர் முடிவு

## மாற்றுவழி இல்லை என்கிறார் ஜனாதிபதி

கம்பஹா, ஜன.20

மலையகத் தமிழர் குடியுரிமை சம்பந்தமாக திடீர் முடிவு எடுத்தேன். அதே போல, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் திடீர்முடிவு விரைவில் எடுப்பேன். அது சிலருக்கு கசப்பானதாகஇருக்கலாம். அதுபற்றி நான் கவலைப்படமாட்டேன். இதைவிட வேறு மாற்று வழியும் எனக்கு இல்லை.

இப்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன சொன்னார்.

கம்பஹாவில் சனிக்கிழமை நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

திரு. ஜெயவர்த்தன மேலும்சொன்னதாவது;

நாடற்றோர் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டுவிட்டது. இதுபற்றி எவரும் எதிர்க்கலாம். நான் முடிவை மாற்ற மாட்டேன்.

இதுபோன்று இனப்பிரச்சினைக்கும் விரைவில் திடீர் முடிவு ஒன்றைக் காண உள்ளேன்.

இம்முடிவு சிலருக்குக் கசப்பைக் கொடுக்கலாம். அதுபற்றி நான் அக்கறைப்படப் போவது இல்லை.

மனிதாபிமான முறையில் இனப் பிரச்சினையை அணுக வேண்டும்.

ஜனநாயக கோட்பாடுகளை நான் மீறமுடியாது. இனப்பிரச்சினைக்கு துரிதமான முடிவு காணும் நடவடிக்கைகளை நான் மேற்கொண்டுளேன்.

மேலும் பேச்சுக்கள் இது சம்பந்தமாக இந்தியாவுடன் நடத்தப்பட உள்ளன.

இப்பிரச்சினைக்கு விரைவில் திடீர் முடிவு காண்பதைத் தவிர வேறுவழி எனக்கு இல்லை.—

இப்படி ஜனாதிபதி சொன்னார்.

### சுபநேரம்

20 - 01 - 86
திங்கட்கிழமை
சுபநேரம்
12.35 முதல் 2 05 வரை
ராகுகாலம்
8 05 முதல் 9.35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
கார்த்திகை விரதம்

# மக்களின் மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்போம்!

## செயலூக்கக் குழுக் கூட்டத்தில் பலரும் விடுத்த அறைகூவல்!!

— உதயன் பிரதம செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜன. 20

இராணுவ முகாம்களை மக்கள் வாழும் பகுதிகளில் இருந்து அகற்ற வேண்டும். பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ்பெற வேண்டும்.

அவற்றுக்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் விதத்தில் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த மக்கள் செயலூக்கக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பலரும் அறைகூவல் விடுத்தனர்.

அங்கு பேசிய பலரும், அரசாங்க அடக்குமுறைகள், அநியாயங்களுக்கு எதிரான தமது உள்ள, உணர்ச்சிக் குமுறல்களை வெளியே கக்கினர்.

யாழ் குடாநாட்டில் இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள 1,000மீட்டர் பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது குறித்து ஆராய்ந்து நடவடிக்கையில் இறங்குவதற்காக யாழ் பிரமுகர்கள் கலந்து கொண்ட பிரஸ்தாப கூட்டம் நேற்று நடந்தது

பல்துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

'சற்றர்டே ரிவியு' ஆசிரியர் திரு. காமினி நவரட்ண இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

தலைமையுரையில் திரு. காமினி நவரட்ண சொன்னதாவது:-

கண்காணிப்பு வலயம் என்று முன்னர் கூறப்பட்டது இப்பொழுது பாதுகாப்பு வலயம் என்று மீண்டும் வந்துள்ளது.

திருகோணமலையை முடித்தாகிவிட்டது இப்போது அவர்கள் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள்

பொதுமக்கள் தாக்கப்படப்போகின்றார்கள் இதற்கு நாம் என்ன செய்யப் போகின்றோம்? இப்போது நாம் எல்லோரும் போராளிகளாகிவிட்டோம். முஸ்லிம்களும் போராளிகளாகிவிட்டார்கள் இப்படி அரசாங்கமும் இராணுவமும் கருதுகின்றது.

நாம் இதற்கு இடங்கொடுக்கக்கூடாது. வீட்டினுள்ளும் எமக்கு இன்று பாதுகாப்பு இல்லை; வெளியே இழுத்துப் போட்டுச் சுடுகின்றார்கள்.

கடுமையான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் காலம் வந்துவிட்டது.

இதுசம்பந்தமாகச் செயல்பட நடவடிக்கை குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இந்த அமைப்புக்கு, சட்டதிட்டம் இல்லை; உத்தியோகத்தர் கிடையா.

வீடுகளில் இருந்து கொண்டு பேசுவதில் பயன் இல்லை. எல்லாரும் முன்னணிக்கு வந்து செயல்படவேண்டிய காலம் இது.

இப்படி திரு. நவரட்ண கூறினார்.

### மக்கள் சக்தியை திரட்ட வேண்டும்

பேராசிரியர் கு. நேசையா பேசுகையில் சொன்னதாவது;

கண்காணிப்பு வலயம், பாதுகாப்பு வலயம் ஒன்றும் எமக்கு வேண்டாம்.

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை எதிர்த்து நாம் ஒவ்வொருவரும் இயங்கவேண்டும். இதற்கான எதிர்ப்பைக் காட்ட மக்கள் சக்தியைத் திரட்டவேண்டும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 1930இல் மாபெரும் சத்தியாக்கிரக இயக்கம் நடந்தது. 2 லட்சம் பேர்வரை கைது செய்யப்பட்டனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் இருந்து வந்த ஏழு பேர் கடலுக்குப் பலி!

மன்னார், ஜன. 20

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பிய தலைமன்னார் பேசாலைப் பகுதியைச் சேர்ந்த ஏழு பேர் கடலில்மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இவர்கள் பயணம் செய்த படகு நடுக்கடலில் சனிக்கிழமையன்று கவிழ்ந்து விட்டது. எனினும் இவர்களுடன் சேர்ந்து வந்த மற்றும் 16 பேர் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

இந்த 16 பேரும் கடற்படையினரால் தள்ளாடி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டிருந்தனர் பின்னர் உறவினர்கள் அவர்களை அழைத்துச் சென்றனர்.

படகில் பயணம்செய்த 23பேரும் 1983, 84 ஆம் ஆண்டுகளில் கலவரங்களையடுத்து தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்றிருந்தார்கள்.

### முச்சந்திமுரளி



பதினாறு பேருக்குஆபத்பாந்தவர்களாக வந்திருக்கினமாம். ஆச்சரியமாய்க் கிடக்கு. ஒமோம் அவை ஆபத்பாந்தவராகவும் வருவினம், ஆபத்துவிளைவிக்கிறவையாகவும் வருவினம். எல்லாப் அவையின்ரை "மூட்"டைப் பொறுத்திருக்கு கண்டியளோ !

# இன்று முதல் முப்படைகள் கூட்டுத் தேடுதல்

கொழும்பு, ஜன.20

வடக்கு கிழக்கு தேடுதல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு, கடற்படை, விமானப்படை வீரர்களும் இன்று தொடக்கம் உதவி புரிவார்கள். அவர்கள் கூட்டாகத் தேடுதல் வேட்டையில் ஈடுபடுவார்கள்.

முப்படைகளையும் கூட்டாக ஈடுபடுத்துவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள இணைப்பு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சுடன் நெருங்கிய வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகை ஜெயமாலினி வீட்டில் ஆடை...?

'டாக்டர் சிவா' படத்தில் நடிகர் திலகத்துடன் நடித்து, தமிழ்த் திரையுலகில் பிரவேசித்தவர் ஜெயமாலினி.

சினிமாவில் அரை குறை ஆடையில் தான் அனேகமாக இவரைப் பார்க்க முடியும். வீட்டில் எப்படி இருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

தினசரி சினிமா

பயந்து விடாதீர்கள்! வீட்டில் இருக்கும் போது சேலைகட்டி தமிழ்ப் பண்பாட்டோடு பவ்வியமாகக் காட்சியளிப்பார்.

இவரை எல்லோரும் தெலுங்குப் பெண் என்று நினைக்கிறார்கள். இவர் தெலுங்குப் பெண் அல்ல. தமிழகத்தைச் சேர்ந்தவர் இவர்.

சில்க், அனுராதா, பபிதா, டிஸ்கோ சாந்தி ஆகியோரது வரவுக்குப்பின் தமிழ்த் திரையுலகு இவரை ஓரக் கண்ணால் பார்க்கத் தொடங்கி விட்டது.

இது பற்றி அவர் கூறுகையில், ''எப்போதுமே தமிழில் நான் அதிகம் ஆடியதில்லை. என்னை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வது ஆந்திரத் திரையுலகம் தான்.

தமிழ்த் திரையுலகில் தமிழர்கள் மின்னுவது அபூர்வம் தான் ஸ்ரீப்ரியா போன்ற அற்புதமான நடிகைகளுக்குக் கூட இங்கே வாய்ப்பில்லையே!

கவர்ச்சி நடனம் என்பது சீசனைப் பொறுத்தது. முன்னர் ஜோதிலட்சுமி, சி. ஐ. டி. சகுந்தலா, விஜயலலிதா போன்றோரின் சீசனாக இருந்தது பிறகு என் சீசன்

சீசன் மாறுவதைப் போல இப்படி அடுத்தடுத்து ஒவ்வொருவராக மாறிக்கொண்டிருப்பது சினிமா உலகின் நடைமுறையாகி விட்டது'' என்றார்.

ஜெயமாலினி சினிமா உலகை நன்றாகவே புரிந்து கொண்டுள்ளார்.

நடிகைகளில் வித்தியாசமானவர். நன்கு தெரிந்தவராக இருந்தால் கூட ஒரு புன்னகை மட்டும தான். அரட்டை அடிப்பது இவருக்கு அறவே பிடிக்காது. அளந்து தான் பேசுவார். தெய்வ பக்தியில் ''நம்பர் வண்''.

படப்பிடிப்புக்கு நேரம் தவற மாட்டார். தொடர்ந்து நடிக்க வேண்டும் என்றாலும் சிறிதும் சோர்வு அடைய மாட்டார்.

திரையுலகின் அதிசயப் பிறவி ஜெயமாலினி.

## எயிட்ஸை எதிர்த்து போராட தனிப்பிரிவு

ஜெனீவா, ஜன. 19

ஆட்கொல்லி நோயான எய்ட்ஸிற்கு எதிராக போராடுவதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் தனியான பிரிவு ஒன்றை உருவாக்கும்.

எதிர்வரும் ஜூனில் இயங்க ஆரம்பிக்கும் இப்பிரிவுக்கு அமெரிக்கரான டாக்டர் ஜோனதன் மான் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

★ தென் யேமன் கிளர்ச்சி

# ஜனாதிபதி முகம்மது தப்பிஓட்டம்

## இஸ்ரவேல் வானொலி அறிவிப்பு

லண்டன், ஜன. 19

தென்யேமனில் கடும் சண்டை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இதேவேளை நாடுமுழுதாக அரச படைகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக ஏடனில் அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் ஜனாதிபதி அலிநஸார் முகம்மது நாட்டைவிட்டு வெளியேறிவிட்டதாக இஸ்ரவேல் வானொலி அறிவித்தது.

ரஷ்ய ஆதரவான சோசலிஸ்ட் கட்சி அரசின் ஆதரவுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட கடும் மோதலைத் தொடர்ந்து ஏடனுக்கும் வெளியுலகிற்கும் இடையேயான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

அரச படைகள் நாட்டை முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும முரண்பாடான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி அலிநஸார் முகம்மது தென்யேமன் விமானம் ஒன்றின் மூலம் நாட்டைவிட்டு எதியோப்பியாவுக்குச் சென்றிருப்பதாக இஸ்ரவேல் வானொலி நேற்று அறிவித்தது.

கிளர்ச்சியினால் பாதிப்படைந்திருக்கும் ஏடன் பகுதியிலிருந்து வெளிநாட்டவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## தூதுவர் விடுதலை

லண்டன், ஜன 19

கடந்த 11 தினங்களாக கடத்திச் செல்லப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐக்கிய அரபு எமிறேற்ஸ் நாட்டுக்கான லண்டன் தூதுவர் விடுதலை செய்யப்பட்டார்.

கடத்தல்காரர்கள் 30 லட்சம்ஸ்டேர்லிங் பவுண்களை பணயப் பணமாகக் கேட்டிருந்தனர்.

## விமான விபத்து: 91 பேர் கொல்லப்பட்டனர்

சுவாரஸ், ஜன. 19

கௌதமாலாவில் நேற்று உள்ளூர் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த 91 பேரும் மரணமானார்கள்.

தனியார் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான இந்த விமானம், உள்ளூர் விமான சேவையில் ஈடுபட்டிருந்தது.

வடக்கு மாகாணமான சுவாரஸிலஉள்ளசாநதா எலினா விமான நிலையத்துக்கு 20 கிலோ மீட்டர் தூரத்தில் விமானம் வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்து கடந்த சனிக்கிழமையன்று நடந்தது.

## அமெரிக்கா மீது கண்டனம்

நியூயோர்க்,ஜன. 19

பேச்சு,எழுத்துச் சுதந்திரங்களை நசுக்கும் நாடுகளுக்கு அமெரிக்க அரசு ஆதரவளித்து வருகின்றது.

இப்படி நியூயோர்க்கில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

# கடும் குளிரில் வட இந்தியா

புதுடில்லி, ஜன. 19

வட இந்தியா தொடர்ந்து கடும் குளிரின் பிடியில் சிக்கியிருக்கிறது. பல இடங்களில் பனிக்கட்டி மலைகள் குவிந்து கிடக்கின்றன. போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சிம்லாவையும் அதைச் சூழ்ந்த பிரதேசமுமே கடும குளிரால் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றன.

பல இடங்களில் சூழல் வெப்பநிலை உறை நிலைக்குக் கீழ் இறங்கி விட்டது.

வெப்பநிலை ஸ்ரீநகரில் உறை நிலைக்கு 5 பாகை செல்சியஸிற்கும், அமிர்தசரஸில் ஒரு பாகை செல்சியஸிற்கும் கீழ் குறைந்திருக்கிறது.

## யுரேனஸ் கோளுக்கு மேலும் 7சந்திரன்கள்

### நாஸா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கலிபோர்னியா,ஜன 19

யுரேனஸ் கிரகத்திற்கு மேலும் ஆறு உப கோள்கள் (சந்திரன்கள்) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நாஸா விஞ்ஞானிகள் கடந்த வெள்ளியன்று இதனை அறிவித்தார்கள்.

இந்த ஆறு உபகோள்களோடு சேர்ந்து மொத்தம் 12 உபகோள்கள் யுரேனஸிற்கு இருப்பது இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் யுரேனஸிற்கு 5 உப கோள்கள் இருப்பதே அறியப்பட்டிருந்தது.

எனினும் கடந்த 8ஆம் திகதி ஆறாவது உப கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 'வொஜர்-2' விண்வெளிக் கலம் இதனைக் கண்டுபிடித்தது.

விண்வெளித் தகவல்களை அறிவதற்காக 1977 ஆகஸ்டில் இது விண்ணுக்கு ஏவப்பட்டது.

யுரேனஸ் கிரகம தொடர்பான ஒளிப்படங்களை வொஜர் மூலம் தற்போது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது

அதன் மூலமே புதிய ஏழு உபகோள்களும் அறியப்பட்டன.

மேலும் ஒரு டசின் வரையான உபகோள்களை விண்கலம கண்டுபிடிக்கும் என நாஸா விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்

கடைசியாக கண்டுபிடிக்கப்பட்ட ஆறு உப கோள்களும் 20 தொடக்கம் 30 மைல் விட்டமுடையவையாகும்.

## வெளி உலகில்

## பாப்பாண்டவரை பாதுகாக்க குண்டு துளைக்க முடியாத கார்

### தீவிரவாத இந்துக்களை சமாளிக்கவும் ஏற்பாடு

பம்பாய், ஜன. 19

இந்தியாவுக்கு விஜயம் செய்யும் பாப்பாண்டவருக்கு விசேட பாதுகாப்பு அளிப்பதற்காக இத்தாலியிலிருந்து குண்டு துளைக்க முடியாத இரண்டு கார்கள் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

தீவிரவாத இந்துக்களின் எதிர்ப்பை சமாளிப்பதற்காகவே இந்த ஏற்பாடாம்.

பத்துநாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி பாப்பாண்டவர் இந்தியாவுக்கு வருகிறார்.

பாப்பாண்டவரின் விஜயம் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதற்கு ஓர் உந்து முனையாகப் பாவிக்கப்படலாம் என தீவிரவாத இந்துக்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த காரணத்திற்காகவே பாப்பாண்டவரின் விஜயத்தை அவர்கள் எதிர்த்தும் வருகிறார்கள்.

இந்த எதிர்ப்புக்கு மத்தியில் இந்திய விஜயத்தின் போது பாப்பாண்டவருக்கு விசேட பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளை வத்திக்கான அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# வயாவிளான், பலாலி

## பகுதிகளிலிருந்து விவசாயிகள் தொடர்ந்து வெளியேறுகிறார்கள்

காங்கேசன்துறை, ஜன. 20

பலாலி படைமுகாம் பகுதியில் தொடர்ந்து நிலவும பதற்றம் காரணமாக வயாவிளான், பலாலி பகுதி விவசாயிகள் தம் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

பாதுகாப்புப் படை விஸ்தரிப்பில் அடங்கிய பகுதியில் இருந்து முன்பு 100க்கு மேற்பட்ட குடும்பங்கள் தம் விவசாய முயற்சிகளைக் கைவிட்டு இடம்பெயர்ந்திருந்தனர்.

தற்சமயம் அப்பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாக அப்பகுதியை விட மற்றும் பகுதிகளில் வாழ்ந்தவர்களும் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

தொண்டமானாறு பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாக தொண்டமானாறு, வளளாய்ப் பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்க இடம்பெயர்ந்துள்ளனர்.

இதற்கிடையில் கடந்த 15 ஆம் திகதி வயாவிளான் பகுதியில் நடந்த சம்பவத்தின் போது காயமடைந்து தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சுன்னாகம் மயிலங்காட்டைச் சேர்ந்த விசுவர் வீரமுத்து (37 வயது), பொன்னையாஉதயகுமார் (18 வயது) ஆகியோர் தேறி வருகிறார்கள்.

சுருட்டுத் தொழிலாளியான பொன்னையா உதயகுமார் சைக்கிளில் வயாவிளானுக்குச் சென்று திரும்பும் வழியிலேயே துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குள்ளானார்.

## பொருள்கள், பணம் காணமற் போனதாக பலர் முறையீடு

யாழ்ப்பாணம், ஜன.20

கடந்தவெள்ளிக்கிழமை ஏழாலையில் நடந்த சம்பவங்களில் தமது பொருள்கள், பணம் காணமற் போனதாக பலர் முறையிட்டுள்ளனர்.

நாகராஜா சந்திரா தேவி வியாபாரம் செய்பவர். ஏழலை கிழக்கு வாசி. இவரது கார் கணணாடிகள் மற்றும் பல பகுதிகள் துப்பாககி துளைத்த அடையாளங்கள் காணப்பட்டன.

சிறிது காலத்துக்கு முன் கட்டப்பட்ட புதிய வீட்டில் இருந்த தொலைக் காட்சிப் பெட்டி, பாஸ்போர்ட் டெக், மணிக்கூடு, டேப் ரெக்கோடர் போன்ற பொருள்கள் காணமற் போய்விட்டன என்று இவர் தெரிவித்துள்ளார்.

வீட்டுக் கண்ணாடிகள் பலதத சேதம் அடைந்துள்ளன. வீட்டுத் தளபாடங்கள் சின்னாபின்னம் ஆக்கப்பட்டன.

சம்பவதினம் வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை.

தம்பிப்பிள்ளை சிவலிங்கம், ஏழாலை இழக்கு வாசி. இவரிடமிருந்து 2,000 ரூபா பணம், உடுப்பு, நகை முதலியன காணமற் போனதாக தெரிவிககப்படுகிறது.

வீடு சேதமாக்கப்பட்டது.

இராசையா சின்னத்தம்பியின் வீடும் சேதமாக்கப்பட்டது இவர் சிமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்பவர். இவரின் வீட்டில் இருந்து 200ரூபா பணம் உடுப்புக்கள் காணமற் போய்விட்டனவாம.

இளையதம்பிசின்னையா, ஏழாலை வடக்கு வாசி.

இவரிடமிருந்து 36 000 ரூபா பணம், 3,000 ரூபா பெறுமதியான நகைகள் காணமற் போய்விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வானொலி, மணிக்கூடு, தளபாடங்கள், சைககிள்கள் சேதமாக்கப்பட்டன.

வேலுப்பிள்ளை பத்மநாதன், செல்லப்பா இரததினம், ஏழாலை வடக்கு வாசிகள். இவர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டன.

கதிரித்தம்பி செல்வராசாவின் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள், துணிமணிகள் வீட்டின் முன் போடப்பட்டு எரிக்கப்பட்டன.

பீட்டர் தேவதாஸின் மோட்டார் சைக்கிள் சேதமாக்கப்பட்டது.

## 3தமிழரின் சடலங்கள்

### பிரேத அறையில்

மட்டக்களப்பு, ஜன 20

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கூடிய மூன்று தமிழர்களின் சடலங்களைசனியன்றுஆயுதப்படையினர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி பிரேத அறையில் ஒப்படைத்தனர்.

அடையாளங் காணப்படுவதற்காகச் சடலங்கள் வைக்கப்பட்டன.

இரண்டு பேர் ஆரையம்பதி வாசிகள். ஒருவர் கிரான்குளம் வாசி.

ஆரையம்பதி வாசிகள் வருமாறு:

1. குஞ்சுத்தம்பி, வயது 24.
2. மனோகரன், வயது 21.

கிரான்குள வாசி இன்னும் அடையாளங் காணப்படவில்லை.

## சிங்கப்பூர்வாசி பிடிபட்டார்

கொழும்பு, ஜன. 20

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய சிஙகப்பூர்வாசி ஒருவரை சுங்க அதிகாரிகள் சோதனை இட்டதில் 500 கைக்கடிகாரங்களைக் கைப்பற்றினர்.

கைக்கடிகாரங்களுக்குப் பாவிக்கப்படும் 500 பட்டரிகளும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

சுங்க அதிகாரிகளினால் சிங்கப்பூர்வாசி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மினிசினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
BRUCE LEE
in
GAME OF DEATH
(புதிய வெளியீடு)

## 5 தமிழரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 20

கடந்த 13 ஆம் திகதி காத்தான்குடிப் பகுதிக்குச் சென்ற 5 தமிழர்களைக் காணவில்லை என்று மட்டக்களப்பு பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டு உள்ளது.

இந்த ஐந்து பேரும் காத்தான்குடிக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளை இடம் பெற்ற அன்று தான் காத்தான்குடி சென்றார்கள்.

கொள்ளையைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தில் 5 பேரும் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக அவர்களின் உறவினர்கள் பிரஜைகள் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

## ஏழாலை, குரும்பசிட்டி சம்பவங்களால்

### சுன்னாகத்திலும் பதற்றம்

### ஓடிய மாணவி விபத்தில் சிக்கினார்

சுன்னாகம், ஜன. 20

வெள்ளிக்கிழமை குரும்பசிட்டி, ஏழாலை ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்களினால் சுன்னாகம் பகுதியிலும் பதற்ற நிலை காணப்பட்டது.

சுன்னாகம் சந்தையில் கூடிநின்ற மக்கள் மிகவும் தாழ்வாகப் பறந்த ஹெலிக்கொப்டர் இரைச்சலால் பயந்து சிதறி ஓடினர்.

பாடசாலைக்குச் செல்ல பஸ்நிலையம் வந்து நின்ற மாணவர்களும் பாதுகாப்பிடம் தேடி ஓடினர்.

இவ்வாறு ஓடிய யாழ். [illegible] மாணவி ஒருவர் வாகனம் ஒன்றுடன் மோதியதால் காயமடைந்தார்.

தனியார் சிகிச்சை நிலையத்தில் அவருக்கு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

அதிகாலையில் இருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்ததால் பொதுமக்கள் சந்தையில் இருந்து விரைவாக வீட்டுக்குச் சென்றனர். கடைகள் மூடப்பட்டன.

சுன்னாகத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகவும் குறைந்து காணப்பட்டது.

## லிபிய -- அமெரிக்க சிக்கல்; இலங்கையின் நிலைப்பாடு என்ன?

### பகிரங்கப்படுத்த அம்பாறை முஸ்லிம்கள் கோரிக்கை

அம்பாறை, ஜன. 20

லிபிய அரபுக் குடியரசுக்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் அச்சுறுத்தல், ஆக்கிரமிப்புநடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசு தனது நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகநல இயக்கங்கள் கூட்டாக இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

அம்பாறை மாவட்ட மக்கள் பொதுக் காங்கிரஸ் அனுசரணையில் கூட்டிய விசேட மாநாட்டில் கலந்துகொண்ட இயக்கங்களே இப்படிக் கோரிக்கையை விடுத்தன.

லிபிய குடியரசு தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மாநாடு கண்டித்தது. சமூக நல இயக்கங்களே மேற்படி கண்டனத்தை எழுப்பியுள்ளன.

அம்பாறை மாவட்ட மக்கள் பொதுக் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜனாப் எம். எம். முஹமட் ஹாசிம் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெற்றது.

அறுபதுக்குமேற்பட்ட முஸ்லிம் சமூகநல இயக்கங்களின் பேராளர்கள் இந்த மாநாட்டில்கலந்து கொண்டனர்.

### கொழும்பில் குண்டு வைப்பு

## 2 இளைஞர்களுக்கு எதிராக வழக்கு

### பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ்

கொழும்பு, ஜன. 20

கொழும்பில் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் இல்லம், மத்திய வங்கி ஆகியவற்றுக்கு அருகில் கடந்த ஜூலையில் குண்டு வைக்கத் திட்டமிட்டதாக வட பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

அவர்கள் இருவருக்கும் எதிராக பயங்கரவாத சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில்நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பருத்தித்துறையைச் சேர்ந்த துரைசிங்கம் சிறீரங்கநாதன், மொறட்டுவை பொறியியல் பீட மாணவனும் ஊர்காவற்றுறை வாசியுமான வரதலிங்கம் ஜெயக்குமார் ஆகியோருக்கு எதிராகவே குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்கள் இருவரும் ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அலுவலகம், பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கும் குண்டு வைக்கத் திட்டமிட்டிருந்தார்கள் என்று பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திலிருந்து விடுவிக்கப்பட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மட்டக்களப்பில் ரூபா 6 லட்சம் நகை, பணம் கொள்ளை

மட்டக்களப்பு, ஜன. 20

மட்டக்களப்பு நகரில் சனியன்று பகல் நகைமாளிகை ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் புகுந்து 6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் முதலியவற்றைக் கொள்ளை இட்டனர்.

இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள நகை மாளிகை ஒன்றே கொள்ளை இடப்பட்டது.

முகாமையாளரையும் ஊழியர்களையும் கட்டி வைத்து விட்டே கொள்ளை நடத்தப்பட்டது.

கொள்ளை அடிக்கப்பட்ட 200 பவுண் நகைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள், டிசைன் போடுவதற்காக ஏனைய நகைக்கடைகளினால் ஒப்படைக்கப்பட்ட நகைகள் அடங்கியுள்ளனவாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மந்திரம் உடலைச் சுத்தமாக்குகின்றது. கடவுள் நாமத்தை உச்சரிப்பதால் மனிதன் பரிசுத்தனாகிறான்.
ஆகையால் அவன் நாமத்தை எப்போதும் ஜெபித்துக் கொண்டிரு.

-- அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - அச்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 20-01-86

தொலைபேசி: 2430 8 22073 த. பெ. 23


## நல்ல முன்மாதிரி

திறந்த பல்கலைக்கழகத்தின் சகல பரீட்சைகளும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் நடத்தப்படும். பிரஸ்தாப பல்கலைக்கழக நிர்வாகம் இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறது.

திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் தயந்த எஸ் விஜயசேகரா நியமிக்கப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் யாழ் பிரதேச நிலையச் சீர்திருத்தம் சம்பந்தமான விசேஷ கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி, சகல பரீட்சைகளையும் இங்கு நடத்துவது என முடிவு செய்யப்பட்டதாம்.

இந்த முடிவு வரவேற்கப்பட வேண்டியது மட்டுமல்ல, பாராட்டப்பட வேண்டியதும் ஆகும். வடபகுதி மாணவர்களின் பல சிரமங்களையும், கஷ்டங்களையும் இந்த முடிவு போக்கிவிட்டது.

கொழும்புக்கான போக்குவரத்து வசதிகள் நிரந்தரமோ நிச்சயமோ இல்லாத ஒரு சூழ்நிலையில் இங்குள்ள மாணவர்களை கொழும்பு வந்து பரீட்சை எழுதுமாறு கேட்பது நியாயமாகாது. இதனைத் திறந்த பல்கலைக் கழகத்தின் புதிய நிர்வாகம் உணர்ந்திருப்பது மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

பிள்ளைகளைக் கொழும்புக்குப் பரீட்சைக்கு அனுப்பிவிட்டு, போகும்வழியில் அவர்களுக்கு என்ன நடக்குமோ, எங்கே வைத்து அவர்கள் கைதாகிறார்களோ என்று ஏங்கித் தவிக்கும் நிலையில் இருக்கும் பெற்றோருக்கும், புதிய முடிவு பெரும் நிம்மதியைக் கொடுக்கும்.

செய்முறைப் பயிற்சிக்கென கொழும்பிற்குத்தான் செல்லவேண்டும் என்ற நிபந்தனையும் நீக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன பயிற்சிகளை இங்கேயே வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது. அதற்கேற்ற வகையில் ஆய்வுகூட, தளபாட வசதிகளும் வழங்கப்பட இருக்கின்றனவாம்.

இந்த முன்மாதிரியை கல்வித் திணைக்களம், பரீட்சைப் பகுதி, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியனவும் பின்பற்றுவது அவசியம்.

கல்வித் திணைக்களம், பரீட்சைப் பகுதி ஆகியனவற்றின் பல பரீட்சைகளும், பேராதனை பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகளும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதில்லை. வடபகுதிப் பரீட்சார்த்திகள், மாணவர்கள் கொழும்புக்கு அல்லது பேராதனைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு இந்த நிலையை நீக்கி, சகல பரீட்சைகளையும் யாழ்ப்பாணத்திலும் நடத்த அவை ஏற்பாடு செய்ய வேண்டும்.

எந்த ஒரு பரீட்சைக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து தோற்றுவோரின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று காரணம் காட்ட முடியாது. அந்த அளவுக்கு இங்குள்ள மாணவர்கள் பரீட்சைகளை எழுதுவதில் நாட்டமுடையவர்களாக இருக்கிறார்கள்.

எனவே பரீட்சைத் திணைக்களமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் தமது பரீட்சைகளை இங்கு நடத்துவதற்கு மேலதிக பணம் செலவாகுமே என்று எண்ணி அவற்றை யாழ்ப்பாணத்தில் நடத்தாது விடுவது நியாயமில்லை. அவையும் திறந்தவெளிப் பல்கழகத்தின் தாராள சிந்தையையும், பரீட்சார்த்திகள் நலன் கருதும் தன்மையையும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

---

வட பகுதி பாடசாலைகளுக்கு

## இலவச பாடபுத்தகம் இன்னும் வழங்கப்படவில்லை

அச்சுவேலி, ஜன. 20

வடபகுதி பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகம் இன்னமும் வழங்கப்படவில்லை.

பாடசாலை தொடங்கி இரு வாரங்கள் முடிவடைந்த போதிலும் யாழ் மாவட்ட மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் இன்னமும் விநியோகிக்கப்படவில்லை.

இலவசப் பாடப் புத்தகங்கள் கொழும்பிலிருந்து வடபகுதிக்குக் கொண்டு வரப்படவும் இல்லையாம்.

சில பாடசாலைகளில் பழைய புத்தகங்கள் மாணவர்களுக்கு மாறிக் கொடுக்கப்பட்டு ஓரளவு சூழ்நிலைக்கேற்ப கற்பித்தல நடைபெறுகின்றது.

சில பாடங்களுக்கான புத்தகங்கள் முற்றாக இல்லாத நிலையிலும் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

1985 ஆம் ஆண்டுக்கான இலவச புத்தக விநியோகம் யாழ் மாவட்டத்தில் உள்ள சில கல்வி வட்டாரப் பாடசாலைகளில் 3 ஆம் தவணை ஆரம்பத்தில் தான் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

---

# சிங்களவர் அகதியாகும் நிலையை பாதுகாப்புப் படை தீர்க்காது

## இது அவர்களுக்கே தெரியும்

### புறொன்ட்லைன் கட்டுரை கூறுகிறது

இனப்பிரச்சினை காரணமாக தமிழர்-சிங்களவர் அகதிகளாக முகாம்களில் உள்ளனர்.

இது பற்றி இந்திய ஆங்கில சஞ்சிகையான 'புறொன்ட்லைன்' (ஜன 11- 24) இதழில் கட்டுரை ஒன்று வெளியாகி உள்ளது.

அக் கட்டுரையை எழுதியவர், முஸ்லிம் பத்திரிகையாளரான ஐறுப் குவாட்ரி இஸ்மாயில்.

இவர் கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகையில் செய்தியாளராகப் பணி புரிகின்றார்.

கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகியுள்ளது.

சொந்த நாட்டிலேயே சிங்களவர்கள் அகதிகளாக இன்று மாறி விட்டனர். இப்படி சிங்கள அரசியல் வாதிகள் பிரியத்துடன் கூறுகின்றனர்.

இராணுவ வெற்றியில் நம்பிக்கை மிக்கவர்களின் சரித்திர சம்பந்தமான கோரிக்கைகளைப் போன்று, இது உண்மையாக இருக்க முடியாது.

உள் நாட்டு யுத்தம் நடைபெறும் ஒரு நாட்டில் அகதிகள் இருக்கத்தான் செய்வார்கள். சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அது பற்றி எழுதுவதில் அக்கறை காட்டாது இருந்து இருக்கலாம்.

இது சம்பந்தமாக சிங்கள அரசியல் வாதிகளின் கூற்றில் ஒரு பக்கச் சார்பான விஷயம் காணப்படுவது கவனிக்கப்பட வேண்டும்.

தேவையற்ற யுத்தம் ஒன்றினால் துரதிர்ஷ்டவசமாக பாதிக்கப்பட்டவர்கள் பற்றி கவலைப்படும் இந்த அரசியல் வாதிகள், தமிழ் மக்கள் பற்றி கவலைப்பட்டதாகச் சான்றுகளே இல்லை.

இந்தத் தமிழ் மக்கள் கடந்த 27 ஆண்டுகளாக திரும்ப, திரும்ப பல முறை அகதிகளாக்கப்பட்டனர். இறுதியில் சொந்த மண்ணில் இருந்தே அவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்ல வேண்டியதாயிற்று.

இலங்கை இனப்பிரச்சினையில் சிங்களவர் அகதிகளாக வந்த விஷயம் அவ்வளவாகப் பிரபலமாகவில்லை என்பது துக்ககரமான உண்மை.

சிங்கள அகதிகள், ஆக்கிரமிப்புச் செய்யும் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தான் இதற்குக் காரணம் என்பதில் சந்தேகமே இல்லை.

இது துரதிர்ஷ்டவசமானது.

அகதிகளான இந்த சிங்கள மக்கள் பெரும்பாலும் வறிய மீனவர்களும் விவசாயிகளுமே. பல ஆண்டுகளாக தமிழ்ச் சகோதரர்களுடன் வாழ்ந்து வந்தவர்கள். அவர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என்று கூறுவது மிகவும் கஷ்டமானது.

இன்று சிங்கள அகதிகளாக உள்ள பலர், 'அபிவிருத்தித் திட்டங்கள்' என்ற பெயரில் தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றப்பட்டவர்களே. தமிழ்ப்பகுதிகளின் இன விகிதாசாரத்தை மாற்றவே இச்சிங்களவர் குடியேற்றப்பட்டனர்.

இதேவேளை போராளிகளினால் துரத்தப்பட்ட சிங்கள அகதிகளின் தொகை மிகக் குறைவு.

பெரும்பாலான சிங்கள அகதிகள் பயத்தினால் ஓடியவர்கள். அப்படி ஓடுவதற்கு பாதுகாப்புப் படையினரே ஊக்கம் கொடுத்தனர்.

எம்மால் பாதுகாப்புத் தரமுடியாது என்று பாதுகாப்புப்படையினர் அடிக்கடி கூறியதைத் தொடர்ந்து தான் இவர்கள் அகதிகளாக ஓடினர்.

திருகோணமலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்ட சிங்களவர் பலரும் அகதிகளில் அடங்குகின்றனர்.

இவர்கள் வசித்த காட்டுப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரும் போராளிகளும் அடுத்த யுத்தகத்தை நடத்தப் போகின்றனர் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இப்படி 60,000 சிங்களவர் வரை இடம் பெயர்ந்துள்ளனர் நாட்டின் பல பகுதிகளில் அவசரம் அவசரமாகக் கட்டப்பட்ட அகதி முகாம்களில் இவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இன்னும் ஆயிரக் கணக்கானோர் உறவினர்களுடன் தங்கி உள்ளனர். அவர்களும் விரைவில் முகாம்களுக்கு இன்றோ, நாளையோ செல்ல வேண்டிய நிலை தான் ஏற்பட்டிருக்கிறது.

பதற்றம் அதிகரிப்பது, அல்லது சண்டை புதிதாக ஏற்படுவதைப் பொறுத்து அகதிகள் தொகை அதிகரிக்கும்.

இது சம்பந்தமாக உள்ளூர் பத்திரிகைகள் கொடுத்த முக்கியத்துவத்தை ஒரு புறம் வைத்து விட்டுப் பார்த்தால், இப்பிரச்சினையின் பாரதூரத்தை ஒரு சில பொதுமக்கள் தான் உணர்ந்திருக்கிறார்கள். நிச்சயமாக அரசியல் வாதிகள் இதன் பாரதூரத்தை உணர முடியாது உள்ளனர்.

ஆனால் இது அரசுக்கு தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தி உள்ளது.

அதனால் தான், அரசியல் தீர்வு ஒன்றை அமுல் நடத்தும் முன்னர் அகதிகள் அனைவரும் பழைய இடங்களில் குடியமர்த்தப்படுவர் என்று அரசாங்கம் அடிக்கடி உறுதி மொழி கூறி வருகின்றது.

சிங்கள அகதிகள் குறித்து அண்மையில் அமைக்கப்பட்ட (சிங்கள) தேசிய முன்னணியும் எதிர்க்கட்சிகளும் பெரிய ரகளையை எழுப்பி வருகின்றன.

நாட்டின் தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதிலும் பார்க்க இராணுவத்தீர்வு காணுவதில் காட்டும் நாட்டமே, தமிழ் அகதிகள் போன்று சிங்கள அகதிகள் பிரச்சினையும் உருவாகுவதற்குக் காரணம் என்பது தெளிவாகப் புரிகின்றது.

அப்படி ஒரு தீர்வு காணப்படாத வரை, அகதிகள் பிரச்சினையும் தீராது.

தற்போதைய நிலையில் அகதிகள் எப்படி தங்கள் உயிரைப் பிடித்துவைத்து இருக்கிறார்கள் என்பது பற்றி நினைக்கவே கஷ்டமாக இருக்கிறது.

ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 2 வாரங்களுக்கு ஒரு தடவை அரசாங்கம் 230 ரூபா அலவன்ஸ் வழங்குகின்றது.

இதன்படி ஒரு ஆளுக்கு தினம் 3 ரூபா செலவாகிறது. ஒரு மரக்கறி உணவின் சராசரி விலை இது. எப்படி இந்தக் கணக்கு வந்தது என்பது புதிராக உள்ளது.

கடந்த ஆண்டு, ஒரு இலங்கையரின் ஆண்டு வருமானம் 8, 643 ரூபா. தினம் 24 ரூபா. இது அகதிகளுக்கு வழங்கப்படும் அலவன்ஸை விட பத்து மடங்கு அதிகம்.

அனுராதபுரத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றைச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் அரசாங்க அதிபரிடம் ஒரு கேள்வி கேட்டேன்.

அலவன்ஸை அதிகரிக்கும்படி சிபார்சு செய்யும் திட்டம் உண்டா என்பதுதான் என் கேள்வி.

தற்போது வழங்கப்படும் அலவன்ஸ் போதாது என்பது பற்றி கருத்து வெளியிட அரச அதிபர் முதலில் மறுத்தார். ஆனால் அலவன்ஸை அதிகரிக்க சிபார்சு செய்யவில்லை என்றும் சொன்னார்.

அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்ட தொகையே இந்த அலவன்ஸ். அமைச்சரவை விரும்பினால் மாற்றலாம்.

இனப்பிரச்சினை பற்றி அகதிகள் என்ன நினைக்கிறார்கள்? பிரச்சினைக்கு எப்படி தீர்வு காணப்படவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்?

பொதுசன அபிப்பிராயத்துக்கு முரணாக, வடக்கு – தெற்கு எல்லையில் வாழும் மக்கள் அரசியல் தீர்வு பற்றி எண்ணுகிறார்கள் இல்லை. (வடக்கு–தெற்கு எல்லை என்பது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் வாசகம்).

உண்மையில் பல பேர் சொல்கிறார்கள்: "ஆம். [illegible]வர்களுக்கு ஆகக் குறைந்தது மாகாண சபையாவது கொடுக்க வேண்டும்" - என்று.

ஒரு சிங்கள அகதி, பிரச்சினையில் உள்ள உண்மை நிலையை உணர்ந்தவர்.

அவர் சொல்கிறார்: "தமிழருக்கு, அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்காதபடியால் தான், அவர்கள் ஆயுதங்களைத் தூக்கியுள்ளார்கள். அதற்காக அவர்களைக் குற்றஞ்சாட்ட முடியாது. இந்த வழியில் போகாவிட்டால் ஒரு போதும் உரிமைகளைப் பெற முடியாது என அவர்கள் எண்ணுகிறார்கள்"–

பிரச்சினையை மோசமாக்குபவர்கள், பாதுகாப்புப்படையினர் தான்- இப்படி அந்தச் சிங்கள அகதி கூறுகிறார்.

அப்பாவித் தமிழர் ஒருவரை படையினர் சுட்டுக் கொல்லும்போது 5 புதிய போராளிகள் உருவாகிறார்கள் – அந்தச் சிங்கள அகதியின் கணிப்பு இது.

திம்பு இரண்டாம் கட்டப் பேச்சுக்களை இடைமுடிவுக்கு கொண்டு வந்த வவுனியாப் படுகொலை பற்றி அந்த அகதியைக் கேட்டேன்.

வவுனியா விமான நிலையத்துக்குப் பின்புறம் அந்த அகதி வசித்து வந்தார். அதனால் அங்கு நடந்தது அவருக்குத் தெரிந்து இருந்தது.

அருகில் யாரும் தன்னை நோட்டம் விடுகிறார்களா? என்று அந்த சிங்கள அகதி முதலில் ஒரு சுற்றுப் பாரத்து விட்டுச் சொன்னார்:

"உத்தியோகபூர்வமான எண்ணிக்கை 21 பேர்தான் கொல்லப்பட்டனர் என்பது. 21 க்குப் பின்னால் ஒரு '0'ஐ சேர்த்தால் வருவதுதான் சரியான தொகை. ஏன் இப்படி அப்பாவிகளைக் கொல்கிறார்கள் என்பது எனக்குத்தெரியவில்லை."

இவர் போன்று பிரச்சினையை விளங்கிக் கொள்கிறவர் மாதிரியோ, தமிழர் மீது அனுதாபம் கொண்டவர்களாகவோ, பெரும்பாலான சிங்கள அகதிகள் காணப்படவில்லை.

தமிழ் பயங்கரவாதத்தின் பாதிப்புத்தான் தாங்கள் என்று பெரும்பாலான சிங்கள அகதி

(4-ம் பக்கம் பார்க்க)

---



பொய்யாமொழி

குறள்:
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

பொருள்:
இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணை விடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?

---

# வடக்கில் பெரும் தாக்குதலுக்கு இராணுவம் ஆயத்தமாகிறது

சென்னை, ஜன. 19

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு எதிராக பெரிய தாக்குதல் ஒன்றை நடத்த இலங்கை இராணுவம் ஆயத்தமாகி வருகிறது. இதனை நிரூபிக்க மறுக்க முடியாத சாட்சியங்கள்

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை தமிழ்ப் போராளிகள் மீறிவிட்டனர் என்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டை அந்த அறிக்கை மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்திருக்கிறார்கள்.

ஏதுமறியா அப்பாவிப் பொதுமக்களை இராணுவ படுகொலையிலிருந்து காப்பாற்றவும்—

தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவுமே சரில்லா நடவடிக்கை என புலிகள் அந்த அறிக்கையில் தெரிவித்தார்கள்.

போர் நிறுத்தம் என்ற பெயரில் இலங்கை அரசு வடபகுதியில் பெருந்தொகையான யுத்த தளபாடங்களை குவித்து வருகிறது.

இலங்கையில் திட்டமிட்ட வன்முறைகளையும் இனப்படுகொலைகளையும் தடுக்க இந்திய அரசும் உலகின் நாகரிக நாடுகளும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் கோரப்பட்டிருக்கிறது.

---

## வாசகர் திருமுகம்

### தீவுப்பகுதிக்கு சீரான பஸ் சேவைகிடையாதா?

ஏற்கனவே சீர் கெட்டுப் போயிருந்த தீவுப் பகுதி பஸ் சேவைகள் சென்றவாரத்துடன் நின்றுவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அண்மையில் பண்ணையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் காரணம் காட்டி பஸ் காரர்கள் சிலர் தீவுப்பகுதிக்கு பஸ்சேவை நடத்த மறுத்து வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

கடந்த காலத்தில் தீவுப் பகுதிக்கென்றே பஸ்கம்பனிஒன்றுஇருந்து தீவு வாழ் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்ததை எவரும் மறந்து விட முடியாது.

பஸ் தேசியமயமாக்கலுக்குப் பின்னர் நல்ல முறையில் நடைபெற்று மிகுந்த வருமானத்தை ஈட்டிக் கொடுத்து வந்த தீவக பஸ் சேவைகள் சீர் குலைக்கப்பட்டு துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளன.

"நொண்டிக் குதிரைக்குச் சறுக்கின சாட்டு" என்ற முதுமொழிக்கிணங்க சமீபத்தைய வன்செயலைக் காட்டி தீவக சேவைகள் ஒன்றுடன் அல்லது இரண்டுடன் நிர்வாகத்தால் நிறுத்தப்பட்டு விடுகின்றன. ஆனால் மினி பஸ்களோ காலை 6 மணி தொடங்கி மாலை 6. 30 மணி வரை சேவை நடத்துகின்றனவே!

இப்போது காலைப் பாடசாலை பஸ் சேவைகள் விடப்படுவதில்லை. மாலையில் 5 மணிக்கு கடைசி பஸ் ஓடவிடப்படுவதில்லை. இதனால் அரச ஊழியர்கள், தனியார் துறை பஸ் பிரயாணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் நன்மைக்காக உண்டாக்கப்பட்ட போக்குவரத்து [illegible] இன்று [illegible] செல்கின்றது?

[illegible]

வேலணை கிழக்கு,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

### தங்கத்துடன் கைது

மதுரை, ஜன.19

மதுரையில் வைத்து இலங்கை வாசி ஒருவர் 6 தங்க பிஸ்கட்டுக்களுடன் பிடிபட்டார்.

பஸ் ஒன்றை மறித்து [illegible] இட்ட போது இவர் அகப்பட்டார்.

கைதான நபரின் பெயர் முகமது ருக்தீன்.

---

## நினைவுக்கு இனியவர்

நினைவுக்கினியவர் என ஒரு வார்த்தையில் அன்னாரைக் கூறிடலாம். பெருந்தன்மை அவரிடம் பொதிந்திருந்தது. முதுமையின் கனிவும் இளமையின் ஆர்வமும் அவருடன் இணைந்திருந்தன. பெருமிதம் அறியாத பெருமையும் இருந்தது.

அத்தகைப் பெரியார் இராமநாதர் முத்தையா பிள்ளை அவர்கள் சிவபதமடைந்து 31 நாட்கள் ஆகின்றன. எனினும் நவில்தொறும் நூல்நயம் போல அன்னாரின் நினைவு

### நீத்தார் புகழாரம்

பழகியோர் மனஞ்சத்தில் பல்லாண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

புங்குடுதீவிற் பிறந்து பதுளையிலும் அறுபது வருடங்களுக்கு மேலாக நற்பெயரை நிலைநாட்டிய சகோதரர் சுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை (சாமியர்) வைத்தியலிங்கம் என்போரின் இளையவரே திரு. முத்தையா அவர்களாவர். வள்ளுவம் கூறும் நெறியில்பொருள் தந்து அருளும் தந்த நிறுவனமே இவர்களது ஆர். வைத்தியலிங்கம் லிமிட்டெட் எனும் ஸ்தாபனமாகும். இது இவர்களை சுற்றம் சூழ வாழ்தற்கு உதவிற்று. ஆயினும் அதற்கு அப்பால் பலருக்கும் பரந்து உதவும் பயன்தரு பழமரம் போலவும் இருந்ததை நாடறியும்.



கடமையும் கண்ணியமும் அணிகலன்களாயின. இவை மட்டுமல்லாது பொதுவாழ்வு எனும் பெருவாழ்வும் அமையப் பெற்றது. இலங்கைக்கு வந்து மலைநாடு செல்வோர் இவர்களது இல்லத்தில் இளைப்பாறி உவந்தனர்.

அமரர் முத்தையா பிள்ளை அவர்களது நினைவு என்றும் இனிமை தருவதாகும். குடும்பத்தினர்க்கு அனுதாபம் கூறுகிறோம். பெரியார்க்கு அஞ்சலி கூறி அன்னாரின் ஆன்மா சாந்தி பெற எம் பெருமானை வேண்டுகிறோம்.

— ஓர் அன்பன்

**NIRU Tution Centre**
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
A/L - 88-ம் ஆண்டிற்கு
APPLIED & PURE MATHS
A. பத்மநாதன்
* குறிப்பிட்ட மாணவர்களுக்கு மட்டும்.

# உதயன்

20 01-1986

**NIRU Tution Centre**
O/L, 9ஆம் வகுப்புக்கான
பிரிவு - III
ஆரம்பம்- 23 - 1 - 86
விஞ்ஞானம் - செல்வவடிவேல்
கணிதம் : இந்திரன்
வர்த்தகம் - நவம்
சமூகக்கல்வி - வேலாயுதபிள்ளை
தமிழ் & சமயம் - பண்டிதர் இராசையா
ஆங்கிலம் - ரவி
சுகாதாரம் - உமாதேவி

மலையகத் தமிழருக்கு மட்டுமன்றி —

# சகலரது உரிமைக்கும் போராட வேண்டும்

## தொண்டா சொல்கிறார்

கொழும்பு,ஜன.20

மலையகத் தமிழருக்கு உரிமை கிடைத்தால் மட்டும் போதாது,ஏனைய தமிழருக்கும் சிறுபான்மையினருக்கும் உரிமைகள் கிடைக்கப் போராட வேண்டும்.

இப்படி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பேசினார்.

கொட்டாஞ்சேனை சென். பெனடிக்ற் கல்லூரியில் கடந்த சனி மாலை நடந்த முத்தமிழ் விழாவில் திரு தொண்டமான் பேசினார்.

திரு. தொண்டமான் மேலும் சொன்னதாவது;

மலையகத் தமிழரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பறித்துவிட்டால் அவர்கள் முடிந்து விடுவார்கள் என்று 1952 இல் நினைத்தார்கள். அவர்களுக்காக எவரும் குரல் எழுப்ப இருக்க மாட்டார்கள் என்றும் எண்ணினார்கள். அதைப் பிழை என்று இன்று நான் நிருபித்து விட்டேன்.

ஐ தே. க. அரசு தான் மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவத்தைப் பறித்தது.

அந்த ஐ தே.கட்சியை நம்பலாமா? அதனுடன் ஒத்துழைக்கலாமா? என்று கேட்டார்கள்.

இன்று ஐ. தே க. அரசாங்கத்தைக் கொண்டு தான் மலையகத்தமிழரின் குடியுரிமையைப்பெற்றுக் கொடுத்துள்ளேன்.

எம்மை எந்த இடங்களில் இருந்து விரட்டி அடித்தார்களோ அந்த இடங்களில் மீண்டும் வாழப்போகின்றோம்.

பழம் பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அதனால் திருப்தி அடைந்து விடக்கூடாது —

இப்படி திரு. தொண்டமான் சொன்னார்.

## மக்களின் மாபெரும் போரா...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அப்படியானதொரு இயக்கம் இன்று தேவைப்படுகின்றது.

இதற்கு எமது ஆத்மீக பலத்தைப்பெருக்கவேண்டும். அரசாங்கம் எப்படியான கொடூர சட்டங்களைக் கொண்டு வந்தாலும் நாம் பணிந்து போகக்கூடாது.

எமக்குச் செய்யப்படும் அநீதிகள் குறித்து சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நாம் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதைச் சொல்லவேண்டும்.

எந்தப் பயமுறுத்தலுக்கும் நாம் பணியக் கூடாது. எமது உரிமைகளை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

சகலரும் இணைந்து பிரதிக்ஞை எடுத்துச் செயல்படவேண்டிய காலம் இது.

இப்படி பேராசிரியர் சொன்னார்.

## தியாகம் செய்ய ஆத்மீக பலம் தேவை

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு கா. விசுவலிங்கம் பேசுகையில் சொன்னதாவது:-

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை அரசு அமுல் நடத்தத்தான் போகின்றது.

யாழ் மக்கள் பேசிப் பேசிய காலத்தைக் கழிப்பவர்கள்.

இப்பொழுது செயல்படும் நேரம் வந்துவிட்டது.

தியாகம் செய்ய நாம் ஆத்மீக பலத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

என்னமாதிரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதுபற்றி நாம் நன்கு ஆலோசித்து தீர்மானிக்கவேண்டும் — இப்படி திரு. விசுவலிங்கம் சொன்னார்.

அன்னையர் முன்னணியின் செயலாளர் திருமதி நிர்மலா பாலரத்தினம் பேசுகையில்,

பாதுகாப்பு வலயம் வாபஸ் பெறவேண்டும் என்று கோரியும் கோட்டையில் இருந்து ராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்று கோரியும் மறியல் போராட்டத்தை நடத்த எமது முன்னணி தீர்மானித்துள்ளது—என்று சொன்னார்.

## கோட்டைக்கு முன்னால் சத்தியாக்கிரகம்

திருமதி எம். அருணாசலம் சொன்னதாவது:-

எமது பிரச்சினைகளைத் தீர்க்க இதுவரை நாம் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை.

இனி நாம் வேறு பாதையை நாடவேண்டும்.

கோட்டை இராணுவ முகாம் முன்னால் சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொள்ளுவதுதான் எஞ்சியுள்ள ஒரே வழி.

அந்த சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள நான் தயார்—இப்படி திருமதி அருணாசலம் துணிவுடன் சொன்னார்.

சட்டத்தரணி திரு. பிரான்ஸிஸ் சேவியர் சொன்னதாவது:-

அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்களுக்கு தமிழ்ப்பகுதிகளில் என்ன நடக்கின்றன என்பது தெரியவில்லை.

திருகோணமலையில், நிலாவெளிக் கிராமத்தில் 127 தமிழ்ப் பொது மக்கள் கொல்லப்பட்டார்கள் என்று கூறியபோது, நீதி அமைச்சர் நிசங்க விஜயரட்ன ஆச்சரியப்பட்டார் 'அப்படியா? எனக்கு இது தெரியவில்லையே' என்று அவர் சொன்னார்.

## நடப்பவை வெளிநாடுகளுக்கு தெரியவேண்டும்

யாழ்ப்பாணம் மற்றும் தமிழ்ப்பகுதிகளில் என்ன நடைபெறுகின்றன? என்பது பற்றி இலங்கை அரசு தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. உலகநாடுகள் தெரிந்துகொள்ளவேண்டும். உலக அபிப்பிராயம் உருவாக்கப்படவேண்டும்.

இதற்கு ஏற்ற விதத்தில் நாம் அமைப்பு ரீதியாகச் செயல்படவேண்டும்.

மோசமான முறையில் அவசரகாலச் சட்டங்கள் சர்வாதிகார நடவடிக்கைகள் இடம் பெறும் நாடுகளில்கூட சில ஒழுங்குமுறை வகுக்கப்பட்டு அமுல் செய்யப்படுகின்றன.

யுத்தத்தில் கூடச் சில ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

நம் நாட்டில் எல்லாம் தலைகீழாக நடக்கிறது.

— இப்படி சட்டத்தரணி திரு. பிரான்ஸிஸ் சேவியர் சொன்னார்.

## கோட்டைக்கு முன்னால் சூடு வாங்க தயாரா?

இளைப்பாறியரயில்வே அதிகாரி திரு. எம். ஆறுமுகம் சொன்னதாவது:-

பேசிக் கொண்டிருப்பதற்கு இது தருணம் அல்ல.

குறிப்பிட்ட காலத்தினுள் கோட்டை இராணுவ முகாமை அகற்றாவிட்டால் கோட்டை முகாம் முன்னால் சத்தியாக்கிரகம் செய்வோம் என்று அரசுக்கு அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் நாம் அமைதிஊர்வலம்நடத்தி கோட்டைக்கு முன்னால் சென்று சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்.

அவர்கள் வேண்டுமானால் எங்களைச் சுடலாம. இதற்கு எம்மில் எத்தனை பேர் தயாராக உள்ளார்கள்?

இன்று எம் முன்னால் உள்ள ஒரே ஒரு ஆக்கபூர்வமான வழி இது தான்.

'இதை விட்டு திட்டம், திட்டம் என்று பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை.

—இப்படி திரு. ஆறுமுகம் சொன்னார்.

பேராசிரியர்நேசையா:

"இது விஷயத்தில் நாம் அவசரப்படக் கூடாது. படிப்படியாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது கோரிக்கைகளுக்கு அரசு இணங்காவிட்டால் தமிழ்ப் பகுதிகள் முழுவதுமே ஸ்தம்பிக்கும் நிலைமையைநாம் ஏற்படுத்த வேண்டும்.

எல்லாவற்றுக்கும் எமது ஆத்மீக பலத்தைப் பெருக்க வேண்டும்.

வண பிதா மைக்கல் ஜோசப் சொன்னதாவது;

தமிழர் எப்போதும் சாந்தமானவர்கள். ஆனால் அவர்கள் தீவிரமாகச் செயல்பட வேண்டிய தருணம் இது.

எப்பொழுதும் அமர்ந்து இருந்து பிரார்த்தனை செய்து கொண்டிருக்க முடியாது.

நாம் தீவிரமாகச் செயல்படவேண்டும்.

கச்சேரி மற்றும் அலுவலகங்கள் முன்னால் சத்தியாக்கிரகம் இருந்தது முன்னரும் வெற்றி அளிக்கவில்லை.

இதனால் யாழ்ப்பாணத்தில் எதையும் செய்து விடலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

நாம் எடுக்கும் முடிவுகள் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இருக்க வேண்டும்.

இன்றைய பதற்றநிலை, உளரீதியான தாக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்தி உள்ளது. இளம் சந்ததியினர் தான் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

'நோயுற்ற சமுதாயம், ஒன்று வருங்காலத்தில் எம்மத்தியில் வரப்போகின்றது.

இப்படி வண. பிதா மைக்கல் ஜோசப் சொன்னார்.

முடிவுரையில் திரு. காமினி நவரட்ணசொன்னதாவது:-

உண்மைக்கும் நீதிக்குமாக நான் போராடுகின்றேன்; இனரீதியாக அல்ல.

நாம் எடுக்கும் நடவடிக்கைகள் பகுத்தறிவுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

பாதுகாப்பு வலயப் பிரகடனம் முதலில் வாபஸ் பெறப்படவேண்டும். முகாம்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும். இது சம்பந்தமாக அரச அதிகாரிடம் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும். மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும்.

மேற்கண்ட அடிப்படையில் எமது நடவடிக்கைகள் அமையவேண்டும் — இப்படி அவர்சொன்னார்.

## அமைச்சர்கள் பதவி துறப்பு

புதுடில்லி, ஜன.19

இந்தியாவில் மூன்று அமைச்சர்கள் பதவியை ராஜினாமா செய்தார்கள் தமது கட்சியில் புதிய பதவிகளை ஏற்கவே இந்த ராஜினாமா.

வர்த்தக அமைச்சர் அர்ஜுன் சிங் இந்திரா காங்கிரஸ் கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தொழில் மந்திரி அஞ்சையாவும், பெற்றோலிய அமைச்சர் நவத் கிஷோர் சர்மாவும் கட்சியின் பொதுச் செயலாளர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

நாயாற்று வெளி மோதல்

# எட்டுப் படைவீரர் பலி!

## போராளிகள் தரப்பில் ஒருவர்

## புலிகள் இயக்கம் சென்னையில் அறிவிப்பு

சென்னை. ஜன. 19

மன்னார் பாப்பா மோட்டையில் உள்ள கண்டல் நாயாற்று வெளியில் போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 6 மணி நேர நேரடிச் சமரில் எட்டுக்கும் அதிகமான படைவீரர்கள் கொல்லப் பட்டனர். போராளிகள் தரப்பில் ஒருவர் மாண்டார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது

இந்தச் சமரில் ஆயுதப் படையினரின் இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்று சேதமாக்கப்பட்டது.

படுகாயமடைந்த சக வீரர்களை ஆயுதப்படையினர் தோள்களிலும் தரையிலும் இழுத்துச் சென்றனர்.

இந்தச் சண்டையின் போது படைவீரர்களில் பெருமளவு ஆயுதங்கள், ரொக்கட் லோஞ்சர்கள், ஹெல்மட், சப்பாத்துக்கள் ஆகியவை போராளிகளினால் கைப்பற்றப்பட்டன.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருந்தது

## பொலீஸ் சூடுபட்டு முஸ்லிம் சிறுமி மரணம்

மட்டக்களப்பு, ஜன 20

பொலீஸார் சுட்டதில் காயமடைந்த 8 வயது முஸ்லிம் சிறுமி நேற்று மரணமானார்.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்திற்கு கடந்த புதன் இரவு குண்டு வீசப்பட்டது. பொலீஸார் சுட்டதில் ஹலிமா என்ற சிறுமி காயமடைந்தார்.

மூன்று நாள் சிகிச்சையின் பின்னர் இச்சிறுமி நேற்று மரணமானார்.

மரணவிசாரணையில் சிறுமியின் தந்தை அப்துல்காதர் சாட்சியமளித்தார்.

அவர் சொன்னதாவது; சம்பவதினம் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து ஆயுதபடையினர் திருப்பிச்சுட்டனர்.

அருகில் இருந்த ஹலிமா ஓடி வந்து என் காலைக்கட்டிப் பிடித்துக் கொண்டார் ஆனால் ஒன்றுமே பேசவில்லை. பயத்தினால் பேசாது நிற்கிறார் என்று எண்ணினேன். ஆனால் முதுகில் இருந்து இரத்தம் வழிந்ததைக் கண்டபின்னர்தான், துப்பாக்கிச் சூடு தாக்கியது என்பதை உணர்ந்தேன். இப்படிச் சொன்னார்.

கொலை என்று மட்டக்களப்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ரி. சிவநாதன் தீர்ப்பளித்தார்.

## இணைப்பதிகாரியை செயலூக்கக் குழு சந்திக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ் குடாநாட்டில் இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள பிரதேசம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டதால் ஏற்பட்ட நிலை குறித்து யாழ் மக்கள் செயலூக்கக் கமிட்டி, யாழ் மாவட்ட இணைப் பதிகாரியைச் சந்தித்துப் பேசத் தீர்மானித்துள்ளது.

நேற்று நடந்த மக்கள் செயலூக்கக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டம் 'சற்றர்டே ரிவியூ' அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

பல்துறைப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

புதிதாக வந்துள்ள பாதுகாப்பு வலயப் பிரகடனத்தினால் நேரப்போகும் அபாயங்கள் பற்றிப் பலர் தங்கள் உள்ளக் குமுறல்களை இக்கூட்டத்தில் வெளியிட்டனர்.

இறுதியில் வடபகுதி இணைப்பதிகாரியைச் சந்தித்து இது பற்றிப் பேசுவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக பத்துப் பேர் கொண்ட கமிட்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

அந்தக் கமிட்டியின் கூட்டம் இன்று (திங்கள்) காலை 'சற்றர்டே ரிவியூ' அலுவலகத்தில் கூடுகின்றது.

இணைப்பதிகாரியை எப்பொழுது சந்திப்பது, என்ன என்ன கோரிக்கைகளை முன் வைத்துப் பேச்சு வார்த்தை நடத்துவது ஆகியன குறித்து இக்கமிட்டி ஆராய்ந்து முடிவுசெய்யும்.

## மட்டக்களப்பில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எரிந்த நிலையில் காணப்பட்டதாக பொதுமக்கள் சிலர், மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவிடம் நேற்று முறையிட்டனர்.

பிற்பகல் 3 மணிவரை துப்பாக்கி வெடிச்சத்தங்கள் இருதயபுரம் பகுதியில் கேட்டவண்ணம் இருந்ததாம்.

மோதலின் பின்னர் ஆயுதப் படையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்து 14-30 வயதுக்கு இடைப்பட்டவர்களைக் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

இவர்கள் இச்செய்தி எழுதப்படும்வரை விடுவிக்கப்படவில்லை.

பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறக் கோரி

# அன்னையர் முன்னணியின் மறியல் போராட்டம் புதன் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஜன. 20

கோட்டை இராணுவ முகாமை அகற்றக் கோரியும் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ் பெறக் கோரியும் யாழ் அன்னையர் முன்னணி மறியல் போராட்டம் ஒன்றைத் தொடர்ச்சியாக நடத்தத் தீர்மானித்து உள்ளது.

எதிர் வரும் புதன்கிழமை முதல் இம் மறியல் போராட்டம் யாழ் செயலகத்தின் முன்னால் நடைபெறும்.

புதன்கிழமை காலை 8 மணிக்கு மறியல் போராட்டம் ஆரம்பமாகிறது.

சனிக்கிழமை நடந்த அன்னையர் முன்னணியின் கூட்டத்தில் இது சம்பந்தமாக தீர்மானிக்கப்பட்டது.

மறியல் போராட்டம் சம்பந்தமாக அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கை வருமாறு:

யாழ் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றி 1,000 மீட்டர் தூரம் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. அப்பகுதிகளில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த இராணுவத்தினருக்குச் சட்ட பூர்வமாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அரசின் மேற்கண்ட செயல்களை அன்னையர் முன்னணி கடுமையாக ஆட்சேபிக்கிறது.

பாதுகாப்பு வலயச் சட்டம் பிரகடனப்படுத்தாத போதே இராணுவத்தினரின் தாக்குதலால் யாழ் நகரில் கடந்த இரண்டு வாரங்களில் இறந்தவர்கள் தொகை அச்சமூட்டும் வகையில் அதிகரித்துள்ளன.

நகரின் மத்தியில் இராணுவ முகாம் அமைத்ததன் விளைவே இதுவாகும்.

யாழ் மக்கள் மரண பயத்தின் மத்தியிலேயே அன்றாடக் கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளது.

அப்பாவி மக்கள் பரிதாபமான முறையில் மரணமாவதைத் தடுக்க கோட்டை இராணுவ முகாமை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தையும் உடனடியாக அரசு வாபஸ் பெற வேண்டும்.

இப்படி அன்னையர் முன்னணி அரசாங்கத்தைக் கோரி உள்ளது.

## சிங்களவர் அகதியாகும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எண்ணுகின்றனர்.

பழி வாங்க வேண்டும் என்றும் துடிக்கின்றனர்.

மறுபுறம் பார்த்தால், இப்பிரச்சினையை பாதுகாப்புப் படையினரால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை ஓர் அகதிக்காவது இல்லை.

படையினர்தான் இவர்களை பாதுகாப்புக்காக வீடுகளை விட்டு வெளியேறச் சொன்னவர்களாச்சே!

ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. மீண்டும் பழைய இடங்களுக்குச் சென்று வாழ ஓர் அகதிக்காவது விருப்பமே இல்லை.

பெண்கள் இதில் முன்னுக்கு நிற்கின்றனர். நிச்சயமற்ற நிலைமையில் நாம் பழைய இடங்களுக்குச் சென்று எமது பிள்ளைகளைப் பலி கொடுப்பதா?– இப்படி பெண்கள் கேட்கின்றனர்.

இந்த மனநிலை காரணமாகத்தான், எல்லைப் பிராந்தியத்தில் ஒரு லட்சம் சிங்களவர்களைக் குடியமர்த்தும் தனது திட்டம் பற்றி அரசு மீண்டும் யோசிக்கின்றது.

இன்னொரு அகதி, அனுராதபுர மாவட்ட அமைச்சர் சொன்னதை அப்படியே சொன்னார். அந்த அகதியின் கசப்பான அனுபவம் இது.

மக்களைப் பழைய இடங்களுக்குச் சென்று போராடும்படி அவர் கூறினார் என்று அந்த அகதி சொன்னார்.

அகதிகளின் நிலை குறித்து மாவட்ட அமைச்சர் உணர்ந்தாற்போல் தெரியவில்லை.

அவர் எமது பிரச்சினைகளைக் கேட்கவில்லை. அரசியல் தீர்வு வந்த பின்னர் எம்மைத் திருப்பி அனுப்புவதாக மட்டும் சொன்னார்.

உங்கள் நிலையை அவருக்குச் சொல்லியிருக்கலாமே - இப்படி நான் சொன்னேன்.

"எப்படி முடியும்" — இப்படிக் கூறிய அவர் மேலும் சொன்னார்:

"உங்களைப் போல் நீளக் காற்சட்டை, சட்டை அணிந்து இருக்கவில்லையே அழுக்குச்சாரனுடன் நான் கூறுவதை அவர் கேட்க மாட்டாரே.

நாங்கள் வாயை மூடிக் கொண்டு கஷ்டப்பட வேண்டியதுதான்" - இப்படி அந்த அகதி சொன்னார்.

## கப்பல் சேவை பற்றி பம்பாயில் பேச்சு

கொழும்பு, ஜன. 20

தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிப்பது பற்றி பேச்சுகள் நடத்த போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் இரண்டு பேர் பம்பாய் சென்றுள்ளார்கள்.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது இதனைத் தெரிவித்தார்.

[illegible] ஆரம்பிக்க நாம் தயார். ஆனால் இந்திய அதிகாரிகளிடமிருந்து சரியான பதில் வரவில்லை என்று அமைச்சர் முகமது சொன்னார்.

கொழும்பு — தலைமன்னார் ரயில் சேவை, தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் சேவைகளை ஆரம்பிக்க இலங்கை அரசு முடிவு செய்தது தெரிந்ததே.

ஆனால் இராமேஸ்வரம் — தலைமன்னாருக்கு இடையில் கப்பலை விடுவது [illegible] த்தின் பொறுப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு வலயம்

## பிரகடனத்தை வாபஸ் பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 20

"பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ் பெறு" – அரசாங்கத்தை இப்படிக் கோரியிருக்கிறது வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு.

மேற்படி பிரகடனத்தை வாபஸ் பெற வைக்கும் வகையில் எதிர்ப்புத் தெரிவிக்க ஒன்றிணையுமாறும் கூட்டுக்குழு ஏனைய வெகுஜன இயக்கங்களுக்கு அறைகூவல் விடுத்திருக்கிறது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்றை 15/1,பலாலி வீதியில் உள்ள தொழிற்சங்க பணிமனையில் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு நடத்தவும் கூட்டுக்குழு முடிவு செய்திருக்கிறது.

அரசாங்கத்தின் இச் செயல் கொடூரமான நடவடிக்கையாகும். சாதாரண பொதுமக்களைக் கொல்வதற்கு நியாயப் படுத்தப்படும் செயலாகவும் இதனை கருதவேண்டியிருக்கிறது.

மக்கள் குடியிருப்புகள், அரச, தனியார் ஸ்தாபனங்கள், கல்லூரிகள், வைத்தியசாலைகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்துகள் அனைத்தும் ஸ்தம்பிக்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

இப்படிக் கூட்டுக்குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**நியூ விக்ரேஸ்**
புதிய வீடியோ படவெளியீடுகள்
1 - கருமேடு கருவாயன்
* விஜயகாந்த் * நளினி
2 - ஆண்பாவம்—V. G. P
* பாண்டியன் * ரேவதி
**நியூ விக்ரேஸ்**
எலெக்ரோனிக் கொம்பிளொக்ஸ்
தொலைபேசி:- 23532

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 20-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org